## 1. தலைப்பு 304 – வளி மண்டலவியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு

---

தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 18 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 341.50 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 306.87 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 34.63 மில்லியன் அதாவது 10. 14 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 268.30 | 256.09 | 12.21 | 4.55 |
| மூலதனம் | 73.20 | 50.78 | 22.42 | 30.63 |
| மொத்தம் | 341.50 | **306.87** | **34.63** | **10.14** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 30401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 11.00 | 6.84 | 6.00 | 9.18 | 70.00 | 29.59 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வளிமண்டவியல் திணைக்களத்தின் கீழான 04 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8.91 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0112/000 | 0.22 |
| 6000/0000/00/0002/0156/000 | 0.05 |
| 6000/0000/00/0013/0109/000 | 0.24 |
| 6000/0000/00/0016/0100/000 | 8.40 |
| மொத்தம் | **8. 91** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (ii) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (iii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

30401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 1999 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2014 ஆம் ஆண்டின் போது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 146,072 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.1, 4.2.4, 4.2.5 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் 13 பிராந்திய அலுவலகங்களுக்குரிய காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) டொப்லர் ரேடார் முறைமை**

---------------------------------------------

2006 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் ரேடார் முறைமையொன்றை நிறுவுவதற்காக கூடியது ரூபா 400 மில்லியன் முதலீடு செய்வதற்கு அரசு தீர்மானித்திருந்தது. 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசினால் உலக வளிமண்டவியல் சங்கத்தின் பொறுப்பு நிதியத்தில் ரூபா 320 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக திணைக்களம் 2010 மார்ச் 12 ஆந் திகதி 23 மீற்றர் உயரமான கோபுரமொன்றையும் 50 மீற்றர் நீளமான நுழைவு வீதியொன்றையும் ரூபா 60.45 மில்லியன் கிரயத்தில் தெனியாய பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக பொறியியல் சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டடிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த ரேடார் முறைமை தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் போது அமெரிக்காவின் எலபாமாவில் மேற்கொண்ட பரிசோதனை வெற்றியளித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இரண்டாவது பரிசோதனை உலக வளிமண்டவியல் சங்கம் மற்றும் உரிய ரேடார் விஷேட நிபுணரால் வெற்றியளித்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திணைக்களத்தின் பிரதிநித்துவம் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) டொப்லர் ரேடார் முறைமையை பொருத்துவதற்காக தெனியாய, கொக்கல, மலை உச்சியில் கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்தினால் (CECB) 2010 ஆம் ஆண்டு 27 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், வேலை பூர்த்தி செய்யப்படும் திகதி அவ்வவ்போது மாற்றப்பட்டிருந்ததுடன், முறையான கையளிப்பு நடவடிக்கைகள் 2017 யூன் 14 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) உபகரணங்கள் போக்குவரத்து மற்றும் நிறுவுதல் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 142.68 மில்லியன் காப்புறுதி மேவுகை 2014 மார்ச் 31 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் அதன் திகதியை நீடிப்பதற்கு அல்லது புதிய காப்புறுதி மேவுகையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2016 சனவரி 29 ஆந் திகதி அளவில் ரூபா 9.15 மில்லியன் பெறுமதியான 08 உபகரணங்கள் வெளித் தரப்பினர்களினால் களவாடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் பரிசோதனை நவடிக்கைகள் 2017 யூன் 14 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்ல. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் களவாடப்பட்ட பொருட்களை கண்டுபிடிக்க முடியாமல் இருந்தன.

(v) 2014 ஆம் ஆண்டின் போது ரேடார் முறைமை நிறுவப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டின் போது இந்நாட்டிற்கு கிடைத்திருந்த ரேடார் முறைமை 2013 ஆம் ஆண்டு வரையில் பொருத்தாமை மற்றும் நீண்டகால களஞ்சியப்படுத்தியிருந்தமையால் இயந்திரத்தை எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்க முடியாமல் போயிருந்தது. அதன் பிரகாரம், இயந்திரத்தின் பகுதி மிண்டும் அமெரிக்க ஐக்கிய குடியரசின் உற்பத்தி கம்பனிக்கு 2017 ஏப்ரல் 21

ஆந் திகதி அளவில் கப்பலேற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 5.64 மில்லியன் மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vi) 2015 மே 31 ஆந் திகதி வரை உலக வளிமண்டவியல் அமைப்பின் நம்பிக்கை நிதியத்தில் மேலும் மீதியாக காணப்பட்ட 1,428,841 டொலர்களைப் பயன்படுத்தி ரேடார் முறைமையை திருத்தம் செய்து தருவதற்கு வழங்குனர் இணங்கியிருந்தார்.

**(ஆ) தன்னியக்க வளிமண்டவியல் உபகரண முறைமை**

---

வளிமண்டவியல் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக வளிமண்டவியல் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற இரசம் பூசப்பட்ட உபகரணத்திற்குப் பதிலாக உலக வளிமண்டவியல் சங்கத்தின் நியதிகளுக்கு இணங்கிய வகையில் தன்னியக்க வானிலை உபகரணங்களளை நிறுவுவதற்காக 2008-2009 காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து ரூபா 570 மில்லியன் மானியம் கிடைத்திருந்தது. இதன் கீழ் 38 தானியங்கி வளிமண்டவியல் நிலையங்களை நாடு பூராகவும் நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திருகோணமலை தவிர 37 நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இம் முறைமை மூலம் ஒவ்வொரு நிலையத்திலுமிருந்து 10 நிமிடங்களுக்கு ஒரு முறை வானிலை தரவுகளை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த போதிலும் தரவுகள் லோஹர் ஊடாக கிடைக்க வேண்டிய வளிமண்டவியல் தரவுகள் மட்டக்களப்பு, பொதுவில், மாலிப்பட, தவலம, கொழும்பு மற்றும் சிரிகந்துர ஆகிய பிரதேசங்களில் நிறுவப்பட்டிருந்த நிலையங்களிலிருந்து கிடைத்திருக்கவில்லை.

(ii) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இம்முறைமை மற்றும் தொடர்புபடுத்தப்பட்டிருந்த செய்மதி புவிக்கு சரிவாக காணப்படுவதால் இச் செய்மதி ஊடாக பெற்றுக் கொள்வற்கு திட்டமிடப்பட்ட வளிமண்டவியல் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாத நிலைமை ஒன்று காணப்பட்டது.

(iii) இம்முறைமை அதன் ஆரம்ப சந்தர்ப்பத்தில் இருந்தே பல்வேறு இடையூறுகளுக்கு உட்பட்டு வந்திருந்தன. அவ்வுபகரணங்கள் அடிக்கடி திருத்தங்களுக்கு உட்பட்டிருந்தமையால் பராமரிப்பு செலவினம் அதிகரித்திருந்தது. இம்முறைமையை பராமரிப்பதற்காக 2011-2016 காலப்பகுதியில் ரூபா 73.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iv) மிகவும் சரியான வளிமண்டவியல் தகவல்களைப் பெற்று கொள்வதற்காக தற்போது பயன்படுத்தப்படும் நடைமுறை, நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து தன்னியக்க வளிமண்டவியல் தகவல் முறைமையை நாளதுவரையாகவும் வினைத்திறனாகவும் பேணுதல் கட்டாயமான தேவைப்பாடொன்றாக இருந்தது. அம்முறைமையை நிரந்தரமாக பேணிச் செல்லும் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(இ) வளிமண்டவியல் நிலையம் மற்றும் மழை வீழ்ச்சி நிலையங்களின் செயற்பாடு**

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் கீழ் 22 வளிமண்டவியல் நிலையங்கள் நாடு பூராகவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரணங்களில் பழைய உபகரணங்களும் காணப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 10 வளிமண்டவியலி நிலையங்கள் வெப்ப அளவீடு (Thermograph), மழை வீழ்ச்சி (Pluriograpg) மற்றும் அழுத்த அளவு (Barograph) காற்று வேக அளவு மானி (Anemometer) போன்ற வளிமண்டவியல் உபகரணங்கள் செயற்பாடற்று இருந்தமை கண்டறியப்பட்டன. உபகரணங்கள் அவ்வவ்போது திருத்தம் செய்து பயன்படுத்துதல் அதற்காக காலம் எடுத்தமை, மேலும், பாகங்களை வழங்குவதற்கு சிரமமாக இருத்தல், உபகரண குழாமொன்று திணைக்களத்திடம் காணப்படாமை வளங்கள் போதியளவில் இல்லாமல் இருந்தமை இற்கான காரணங்களாக இருந்தன.

(ii) திணைக்களத்திற்குரிய 521 மழை வீழ்ச்சி அளவீட்டு நிலையங்கள் நாடு பூராகவும் பரவிக் காணப்படுவதுடன் 2017 மே மாதம் இறுதி வரையிலும் 51 மழை வீழ்ச்சி நிலையங்கள் செயற்பாடற்று காணப்பட்டன.

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 47 | 7 |
| (ii) | இரண்டாம் நிலை | 29 | 8 | 21 |
| (iii) | மூன்றாம் நிலை | 238 | 187 | 51 |
| (iv) | ஆரம்ப நிலை | 139 | 117 | 22 |
| | மொத்தம் | 460 | 359 | 101 |

திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு விஷேட அறிவுடன் கூடிய பதவியணியொன்றை பேணுதல் அத்தியாவசிய விடயமொன்றாக இருந்த போதிலும் சிரேஷ்ட நிலை தர பதவியான வளிமண்டவியல் பிரதிப் பணிப்பாளர் மற்றும் வளிமண்டவியல் விஷேட நிபுணர் பதவிகள் முறையே 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இருந்தும் இரண்டாம் நிலைத் தர பதவியொன்றான தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விஷேட தரம்) 2014 ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிடமாக காணப்படுவது அவதானிக்கப்பட்டது. மேலும், மூன்றாம் மட்டத்தின் பதவியான வளிமண்டல அவதானிப்பாளர் பதவிகள் 2011 ஆம் ஆண்டு வரையிலும் வெற்றிடங்களாக இருந்தன.